ஸ்ரீ:

# நாலாயிரத் தனியன்கள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம் ||

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்ம –
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத்குரோர் பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

பூதம் ஸரஸ் ச மஹதாஹ்வயபட்டநாத–
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ||

## திருப்பல்லாண்டு தனியன்கள்

**நாதமுனிகள் அருளிச் செய்தது**
குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம: |
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி||

**பாண்டிய பட்டர் அருளியது**
மின்னார்தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்
சொன்னார்கழற்கமலம்சூடினோம் – முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம் கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்று
ஈண்டியசங்கமெடுத்தூத – வேண்டிய
வேதங்களோதிவிரைந்துகிழியறுத்தான்
பாதங்கள்யாமுடையபற்று.

## திருப்பாவை தனியன்கள்

**பராசரபட்டர் அருளிச்செய்தது**
நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ |
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: ||

**உய்யக் கொண்டார் அருளிச் செய்தவை**
அன்னவயல்புதுவையாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப்பல்பதியம் – இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை, பூமாலை
சூடிக்கொடுத்தாளைச்சொல்லு.

சூடிக்கொடுத்தசுடர்கொடியே தொல்பாவை
பாடியருளவல்லப்பல்வளையாய் – நாடிநீ
வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்றம்

நாம்கடவாவண்ணாமேநல்கு.

## நாச்சியார் திருமொழி தனியன்கள்

**திருக்கண்ணமங்கையாண்டான் அருளியது**
அல்லிநாள்தாமரைமேலாரணங்கினின்துணைவி
மல்லிநாடாண்டமடமயில் – மெல்லியலாள்
ஆயர்க்குலவேந்தனாகத்தாள் தென்புதுவை
வேயர்பயந்தவிளக்கு.

## பெருமாள் திருமொழி தனியன்கள்

**உடயவர் அருளிச் செய்தது**
இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் – பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு

**மணக்கால் நம்பி அருளியது**
ஆரம்கெடப்பரனன்பர்கொள்ளாரென்று அவர்களுக்கே
வாரங்கொடுகுடப்பாம்பில்கையிட்டவன் மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோல்கொல்லிகாவலன் வில்லவர்கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே

## திருச்சந்த விருத்தத் தனியன்கள்

**திருக்கச்சி நம்பிகள் அருளிச்செய்தவை**
தருச்சந்தப்பொழில்தழுவுதாரணியின்துயர்தீரத்
திருச்சந்தவிருத்தம்செய்திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்தும்காரகிலும் கமழ்கோங்கும்மணநாறும்
திருச்சந்தத்துடன்மருவுதிருமழிசைவளம்பதியே.

உலகுமழிசையுமுள்ளுணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க – உலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்தும், மாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம்வலிது.

## திருமாலை தனியன்

**திருவ்ரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது**
மற்றொன்றும்வேண்டா மனமே! மதிளரங்கர்,
கற்றினம்மேய்த்தகழலிணைக்கீழ் – உற்ற
திருமாலைபாடும்சீர்த்தொண்டரடிப்பொடியெம்
பெருமானை எப்பொழுதும் பேசு.

## திருப்பள்ளியெழுச்சி தனியன்

**திருமாலையாண்டான் அருளியது**
தமேவமத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம் |
ப்ராபோதகீம் யோSக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே ||

**திருவரங்கப்பெருமாளரையர் அருளியது**
மண்டங்குடியென்பர்மாமறையோர்மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடிதொன்னகரம் – வண்டு
திணர்த்தவயல்தென்னரங்கத்தம்மானைப் பள்ளி
யுணர்த்தும்பிரானுதித்தவூர்.

## அமலனாதிபிரான் தனியன்கள்

**பெரிய நம்பிகள் அருளியது**
ஆபாதசூடமநுபூய ஹரிம்ஸயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா |
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்

யோ நிஸ்சிகாய மநவை முநிவாஹநம் தம். ||

**திருமலை நம்பிகள் அருளியது**
காட்டவேகண்டபாதகமல நல்லாடையுந்தி
தேட்டருமுதரபந்தம் திருமார்வுகண்டம் செவ்வாய்
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து
பாட்டினால்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

**பெரிய திருமொழி தனியன்கள்**

**திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்தது**
கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்
யஸ்ய கோபி: ப்ரகாசாபி ராவித்யம் நிஹதம் தம:

**எம்பெருமானார் அருளிச்செய்தது**
வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழிகுறையலூர்வாழ்வேந்தன் -- வாழியரோ
மாயோனைவாள்வலியால் மந்திரங்கொள்மங்கையர்கோன்
தூயோஞ்சுடர்மானவேல்.

**ஆழ்வான் அருளிச்செய்தது**
நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்காநெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதம் தமிழநன்னூல்துறைகள்
அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறி பரகாலன்பனுவல்களே.

**எம்பார் அருளிச்செய்தது**
எங்கள்கதியே! இராமானுசமுனியே
சங்கைகெடுத்தாண்டதவராசா -- பொங்குபுகழ்
மங்கையர்க்கோனீந்த மறையாயிரமனைத்தும்
தங்குமனம்நீயெனக்குத்தா.

**முதற்திருவந்தாதி தனியன்**

**முதலியாண்டான் அருளிச்செய்தது**
கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த
பொய்கைப்பிரான் கவிஞர்ப்போரேறு - வையத்
தடியவர்வாழவருந்தமிழ் (நூற்றந்) அந்தாதி
படிவிளங்கச்செய்தான்பரிந்து.

**இரண்டாந்திருவந்தாதி தனியன்**

**திருகுருகைப்பிரான் பிள்ளான் அருளிச் செய்தது**
என்பிறவிதீரவிறைஞ்சினேனின்னமுதா
அன்பேதகளியளித்தானை - நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துகள்சேரும் கடன்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல்.

**மூன்றாந்திருவந்தாதி தனியன்**

**குருகை காவலப்பன் அருளிச் செய்தது**
சீராருமாடத்திருக்கோவலூரதனுள்
காரார்க்கருமுகிலைக்காணப்புக்கு - ஓராத்
திருக்கண்டேனென்றுரைத்தசீரான்கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே! உகந்து.

**நான்முகன் திருவந்தாதி தனியன்**

**ஸ்ரீராமப்பிள்ளை அருளிச்செய்தது**
நாராயணன்படைத்தான்நான்முகனை நான்முகனுக்கு
ஏரார்சிவன்பிறந்தானென்னும்சொல் - சீரார்
மொழிசெப்பிவாழலாம் நெஞ்சமே மொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து.

**திருவிருத்தம் தனியன்**

**கிடாம்பியாச்சான் அருளிச்செய்தது**
கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்து
ஒருவிருத்தம்புக்குழலுறுவீ ருயிரின்பொருள்கட்கு
ஒருவிருத்தம்புகுதாமல் குருகையர்கோனுரைத்த
திருவிருத்தத்தோரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

**திருவாசிரியம் தனியன்**

**அருளாளப் பெருமாள் எம்பெருமானாரருளிச் செய்தது**
காசினியோர்தாம்வாழக கலியுகத்தேவந்துதித்து
ஆசிரியப்பாவதனாலருமறைநூல் விரித்தானைத்
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத்தாரானை
மாசடையாமனத்துவைத்து மறவாமல்வாழ்த்துதுமே.

**பெரிய திருவந்தாதி தனியன்**

**எம்பெருமானார் அருளிச்செய்தது**
முந்துற்றநெஞ்சே! முயற்றிதரித்துரைத்து
வந்தித்துவாயாரவாழ்த்தியே – சந்த
முருகூரும்சோலசூழ்மொய்பூம்பொருநல்
குருகூரன் மாறன்பேர் கூறு.

**திருவெழுகூற்றிருக்கை தனியன்கள்**

**எம்பெருமானார் அருளிச்செய்தது**
வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழிகுறையலூர் வாழ்வேந்தன் – வாழியரோ
மாயோனைவாள்வலியால்மந்திரங்கொள்மங்கையர்கோன்
தூயோஞ்சுடர்மானவேல்.

**சிறிய திருமடல் தனியன்**

**பிள்ளைத் திருநறையூர் அரையர் அருளிச்செய்தது**
முள்ளிச்செழுமலரோதாரன்முளைமதியம்
கொல்லிக்கென்னுள்ளம்கொதியாமெ –– வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியைவெட்டி
மருவாளன் தந்தான் மடல்.

**பெரிய திருமடல் தனியன்**

**பிள்ளைத் திருநறையூர் அரையர் அருளிச்செய்தது**
பொன்னுலகில்வானவரும்பூமகளும்போற்றிசெய்யும்
நன்னுதலீர் நம்பிநறையூரர் – மன்னுலகில்
என்னிலைமைகண்டுமிரங்காரேயாமாகில்!
மன்னுமடலூர்வன்வந்து.

**கண்ணிநுண் சிறுத்தாம்புத் தனியன்கள்**

**ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்தவை**
அவிதிதவிஷயாந்தர: ஶடாரே:
உபநிஷதாமுபகாநமாத்ரபோக: |
அபிச குணவசாத் ததேகசேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து ||

வேறொன்றும் நானறியேன் வேதம்தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்– ஏறு, எங்கள்
வாழ்வாமென்றேத்தும்மதுரகவியாரெம்மை
ஆள்வார் அவரேயரண்.

**திருவாய்மொழித் தனியன்கள்**

**நாதமுனிகள் அருளிச்செய்தது**
பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்

ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

**ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது**
திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்
மருவினியவண்பொருநலென்றும் – அருமறைகள்
அந்தாதிசெய்தா னடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து.

**சொட்டை நம்பிகள் அருளிச்செய்தது**
மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும்
இனத்தாரையல்லா திறைஞ்சேன் – தனத்தாலும்
ஏதுங்குறைவிலேன் எந்தைசடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

**அனந்தாழ்வான் அருளிச்செய்த்து**
ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமா னுசமுனிதன்
வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன் – ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன் செந்தமிழ்வேதம்தரிக்கும்
பேராதவுள்ளம்பெற.

**பட்டர் அருளிச்செய்தவை**
வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்றதமிழ்மறைகளாயிரமும் – ஈன்ற
முதல்தாய்சடகோபன் மொய்ம்பால்வளர்த்த
இதத்தாயிராமானுசன்.

மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும்
தக்கநெறியும் தடையாகித் – தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன்
யாழினிசைவேதத்தியல்.

## இராமானுச நூற்றந்தாதித் தனியன்கள்

**வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தவை**
முன்னைவினையகலமூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் – என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன், தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்.

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்றுநண்ணினர்பால்
சயந்தருகீர்த்தியிராமானுசமுனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்கும் அன்பால்
இயம்பும் கலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே.

சொல்லின்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்துமுன்நாமமெல்லாம் என்தன்நாவினுள்ளே
அல்லும்பகலும் அமரும்படி நல்கு அறுசமயம்
வெல்லும்பரம! இராமானுச! இதென் விண்ணப்பமே.

நாலாயிரத்தனியன்கள் ஸம்பூர்ணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்